★ வெளிநாட்டு தமிழ் அமைப்புகள் மீது இலங்கை

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 17 இதழ் 197

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 02 — 9 — 1993

தீவிர கண்காணிப்பு!

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகளையும், தமிழ்சக்திகளின் நடவடிக்கைகளையும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தீவிரமாக கண்காணித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை இனப்பிரச்னையில் ஐ. நா. வோ அன்றி வேறு நாடுகளின் தலையீட்டையோ ஏற்படுத்த மேற்படி தமிழ் அமைப்புகள் தீவிரமாக முயன்று வருவதாக வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூத

(2ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க ஆதரவைப் பெற தமிழர் முயற்சி?

(வாஷிங்டன்)

இலங்கைப் பிரச்னையில் தலையிட்டுத் தீர்வு காண உதவுமாறு, அமெரிக்க அரசுக்கு நெருக்குதலைக் கொடுக்க அங்குள்ள தமிழ் அமைப்புக்கள் முயன்று வருவதாக இலங்கைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதன் ஒரு கட்டமாகவே, அமெரிக்காவின் மசாசூசெச் மாநிலத்தில் தமிழீழத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு, அம்மாநில மேயரின் ஆதரவும் பெறப்பட்டதாம்.

இவ்வாறு அவரது உதவி மூலம் இலங்கை பிரச்னையின்

(2ம் பக்கம் பார்க்க)

வட-கிழக்கில் படை முகாம்களை

புலிகள் எந்நேரமும் தாக்கலாம்

பிரதமர் ரணில் எச்சரிக்கை

இராணுவம் உஷார் நிலையில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் எவ்வேளையிலும் பாரிய தாக்குதல்களை தொடுக்கலாமென்றதொரு நிலையில் இப்பகுதிகளில் இராணுவம் முழுத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு செய்தியாளர்கள் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:

இலங்கையில் நடந்துவரும் இனவாதப் போரை விரைவில் முடிவிற்கு கொண்டுவர அரசு நம்பிக்கை கொண்டிருந்தாலும் விடுதலைப் புலிகளிடமிருந்து பாரிய தாக்குதல் நடாத்தப்படலாமெனக் கருதி இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது அரசு மேற்கொள்ளும் இராணுவ நெருக்கடியை குறைக்கவும் தமது பலத்தை வெளிப்படுத்தும் வகையில் புலிகள் தமது போராட்ட நடவடிக்கையை அதிகரிக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற 'ஜனகபுர' முகாம் மீதான

(6-ம் பக்கம் பார்க்க)

அரசின் கூற்றில் நம்பகத் தன்மை இல்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில்படையினர் பற்றி அரசாங்கம் கூறும் தகவல்கள்ஒரு நம்பகத்தன்மையற்றதென்று கொழும்பில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை குறிப்பிடுகிறது.

அப்பத்திரிகை மேலும் குறிப்பிடுவதாவது: கிழக்கின் 95 வீதமான பகுதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது

(2-ம் பக்கம் பார்க்க)

அடுத்த 3 மாத காலத்தினுள் கப்பல்கள் தாக்கப்படலாம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மூன்று மாதகாலத்தினுள் கடற்படை கப்பல்கள் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்துவார்களென எதிர்பார்க்கலாமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

அண்மையில் கிளாவி கடலிலும், பருத்தித்துறைக் கடலிலும் புலிகள் கடற்படையின

(2-ம் பக்கம் பார்க்க)

தொண்டா கையளித்த திட்டம் ரணிலுக்கு எதுவும் தெரியாதாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைச்சர் தொண்டமானிடம் லண்டனில் வைத்து சமர்பித்திருக்கும் சமாதான யோசனை பற்றி தமக்கு ஒன்றும் தெரியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டு பத்திரிகையாளர்களிடம்பிரதமர் இதனைதெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்குஎவரும் முயற்சி

(2-ம் பக்கம் பார்க்க)

'இலங்கையில் ஐ. நா. தலையிட்டால் முழு நாடும் தீப்பற்றி எரியும்'

(கொழும்பு)

ஐக்கிய நாட்டு சபையின் தலையீடு வடக்கு கிழக்கு பிரச்னையால் நாட்டில் ஏற்படுமாயின், பிரச்னைக்குரிய அப்பகுதியில் மாத்திரமல்ல, இலங்கை பூராவுமே பூதாகாரமான நிலைமைக்குள்ளாகி நாடு மீண்டும் பற்றி எரியும் நிலை ஏற்படுமென 'சண்டே ஒப்சேவர்' கருத்து வெளியிட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஐ நா. வர

2-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில்

இராணுவ முன்னேற்ற முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லை. மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 11-45 மணியில் இருந்து 1-00 மணிவரை குடியேற்றப் பகுதிகளில் அமைக்கப்பட்ட இராணுவத்தினர் பட்டிக்குடியிகளால்

(2-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக அனுமதியில் இம்முறை மாற்றமில்லை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களின் தொகை எவ்வகையிலும் குறைக்கப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

சில பல்கலைக்கழகங்களுக்கு கூடுதலான இடங்கள் இருந்த போதும், மாணவர் தெரிவு

(2-ம் பக்கம்பார்க்க)

சித்த மருத்துவத்துறை

யாழ்.மாணவர்க்கு சிங்கள மாணவர் ஆதரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை மாணவர்கள் நடாத்தும் போராட்டத்துக்கு, தென்பகுதிப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று பி.பி.சி. சிங்களச் சேவை தெரிவித்துள்ளது.

பி. பி. சி. சிங்களச் சேவையில் யாழ்ப்பாணச் சித்த மருத்

(2-ம் பக்கம் பார்க்க)

★ பருத்தித்துறை துறைமுகத்தில்

செஞ்சிலுவைக் கொடி மீண்டும் ஏற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகம் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கழற்றப்பட்ட செஞ்சிலுவைச்சங்க கொடி மீண்டும் நேற்றுக் காலை ஏற்றப்பட்டுள்ளது. இக்கொடியை

(2ம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கான உதவியை நெதர்லாந்து நிறுத்தும்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தப் போவதாக 'நெதர்லாந்து' அரசு இலங்கைக்கு எச்சரித்திருப்பதாக 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறப்படுவ

2ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

தென்மராட்சியில் அறிவுக்களஞ்சியம்

அறிவுக்களஞ்சியம் - 1 வெளிவந்துவிட்டது. தென்மராட்சிப் பகுதியிலுள்ள வாசகர்களும் சிறு விற்பனையாளர்களும் சாவகச்சேரி சிவம் மெடிகலில் பெற்றுக்கொள்ளலாம். (ஏ-3391)

விவாக சேவை

40 வயது இந்து பூரம் 2 செவ்வாய் 4 பயிற்றப்பட்ட கணித ஆசிரியைக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். 38 வயது, பரணி 4, செவ்வாய் 12 கணக்காளர் சகோதரனுடன் மாற்றும் சம்பந்தமும் செய்யலாம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர். (இ-437)

LONDON EXAMS

C. I. M A. (Stage-1), I. A. B. (Foundation), Intermediate, Final ஆகிய வகுப்புகள் 05-09-93 ஆரம்பமாகின்றன. Computer Basic, Lotus, வகுப்புகள் உடன் ஆரம்பமாகின்றன. குறைந்த கட்டணம், சிறந்த பெறுபேறுகள். உறுதியான கல்வியைப் பெற School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (C-438)

தேவை

நல்ல நிலையிலுள்ள ஸ்ருதி பெட்டி உடன் தேவை. தொடர்பு: கு. பாலச்சந்திரன், 16/2, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (சி-3393)

அறிவுக் களஞ்சியம் - 15
வெளிவந்துவிட்டது!
தமிழீழத்தின்
சிறந்த அறிவியல் ஏடு
விலை ரூபா 12/- மட்டுமே
(எ-3390)

தேசிய பாடசாலைகள் 500 ஆக உயரும்

(உடுவில்)

நாட்டில் மேலும் பல பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போது நாடு முழுவதிலும் அறுபத்தியேழு தேசிய பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

மேலும் 433 பாடசாலைகளை தரமுயர்த்தி ஐந்நூறு பாடசாலைகளை தேசிய பாடசாலையாக்கும் திட்டம் ஒன்றைக் கல்வியமைச்சு வகுத்துள்ளதாக அறியப்படுகின்றது. (109-இ)

மென்பானம் பழரசம் பாவனையாளர்க்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மென்பானம், பழரசம் தயாரிப்பின்போது கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் அண்மையில் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் சில உற்பத்தியாளர்கள் இந்த நடைமுறைகளை முழுமையாக கைக்கொள்ளாமல் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதாக தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

போத்தல்களிலே ஒட்டப்பட்டிருக்கும் லேபல்களில் தயாரிக்கப்பட்ட திகதியும் காலாவதியாகும் திகதியும் குறிப்பிடப்பட வேண்டுமென்ற அறிவுறுத்தலை சில உற்பத்தியாளர்கள் பின்பற்றவில்லை என்றும் திகதிகள் தெளிவாகக் குறிப்பிடாதிருக்கும் மென்பானம், பழரசம் போன்றவை மக்களுக்கு தீங்கினை விளைவிக்கக்கூடியதாக இருக்கலாம் என்பதால் இவற்றினை பாவிப்பது தொடர்பான விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை

(வட்டுக்கோட்டை)

இவ்வாண்டுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சையை மாவட்ட ரீதியில் யாழ். கல்வித் திணைக்களம் நடாத்தவுள்ளது ஆண்டு 4 முதல் ஆண்டு 10 வரையுள்ள வகுப்புகளுக்கான பரீட்சையே யாழ்மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் எனவும் ஆண்டு 3 ற்கான பரீட்சை கோட்டங்களினாலும் நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (139)

தொழில் முயற்சி திட்டம்

(எழுதுமட்டுவாள்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினூடு பச்சிலைப் பள்ளிபகுதியில் தொழில் முயற்சி திட்டத்திற்கு அமைய புலோப்பளையில் தென்னை நாற்று மேடை, தர்மக்கேணியில் குளம் புனரமைப்பு கச்சாய் வெளி தம்பளமம் கோழிவளர்ப்பு இத்தாவில் அரசர் கேணி, ஆடு வளர்ப்பு ஆகிய வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகிறது (170)

சித்த மருத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிஆட்சித்திணைக்களமும் சித்த வைத்தியக்கூட்டுறவுச் சங்கமும் இணைந்து "சித்த மருத்துவ மக்கள் மயப்படுதல்" கருத்தரங்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த மாதம் 30 ம் திகதி காலை நடைபெற்றது.

முதல் நாள் கருத்தரங்கிற்கு யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளரும், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான திரு. தி. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு இளங்குமரன் கலந்து கொண்டார்.

இரண்டாவது நாள் நிகழ்ச்சி யாழ். பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்றது. சித்த வைத்தியத்தின் சிறப்புப் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் பலர் உரையாற்றினர். (162)

ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன பிரவேச விழா கடந்த 30 ம் திகதி திங்கட்கிழமை நல்லூர் கோவில் வீதியிலுள்ள கண்ணன் ஆலயம் ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் மருத்திகானில் ஆரம்பமானது.

இவ்விழா நாளை 3 ம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சியில் பிற்பகல் 4.30 இலிருந்து 5.30 வரை செல்வி வெப்பிரியா ஸ்வரமுத்துவின் இன்னிசைக் கச்சேரி 6.50 இலிருந்து 8 மணி வரை திரு. தி. தில்லைமணியின் பண்ணிசை நடைபெறும்.

நாளை 3-ம் திகதி வெள்ளிக்கிழமை நிகழ்ச்சியில் பிற்பகல் 4.30 மணியிலிருந்து 5.50 மணி வரை செல்வன் நக்கீரன் குணராசாவின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். 6 மணி தொடக்கம் 8 மணிவரை ஸ்வரராக லயலிஹேனா சுரபி சங்கீத பூஷணம் எஸ். திலகநாயகம்போல் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். வயலின்: சங்கீத பூஷணம் வி.கே. குமாரசாமி, மிருதங்கம்: செல்வன் நாகராசா சண்முகலிங்கம். (162)

இசைப்பயிற்சி வகுப்புக்கள்

ஓகன் - ORGAN
கிற்றார் - GUITAR
றம் - DRUM
தபேலா - THABELA

ஆகிய வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்.

ஆரம்பம்: 05-09-93

விபரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றயில்வே கடவை அருகாமை)
(3389)

அமெரிக்க
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர தன்மையை அமெரிக்க அரசிடம் தெரிவித்து அதன் மூலம் ஒரு நெருக்குதலை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -இ

வெளிநாட்டு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

உளவட்டாரங்கள் வெளியுறவு அமைச்சிற்கு எச்சரித்துள்ளனவாம்.

தற்போது இவ்வாறான நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (சி)

அடுத்த
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மின் மூன்று கப்பல்களைத் தாக்கி அழித்ததுபற்றி வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் பிரதமரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் மேற்கொண்ட மேற்படி தாக்குதல்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் மேலும் இவ்வாறான தாக்குதலை யுத்தக்கப்பல்கள் மீது நடாத்த புலிகள் முற்படலாமெனவும் அவர் கூறினார். (இ)

தொண்டா
(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யலாம். அதற்கு அரசாங்கம் ஆயத்த நிலையில் உள்ளது இதற்காக பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாயின் அதில் எதிர்க்கட்சிகள் மற்றும் பல்வேறு தமிழ் குழுக்களும் பங்குபற்ற வேண்டும் என்றார்.

இப்புதிய திட்டம் குறித்து அமைச்சர் தொண்டமான் அரசு தரப்பு பத்திரிகைக்கு விரிவான பேட்டியளித்தும் இதுவரை அரசு இதுபற்றி எதுவும் தெரிவிக்காது மௌனம் சாதித்து வருவதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று கூறியது. (ம-இ)

பல்கலைக்கழக
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைவாகவே காணப்படுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கூடுதல் இடம் இருந்தபோதும் மாணவர் அரைப் பங்கினரே அங்கு கற்கின்றனர்.

மாணவர் தாம் விரும்பும் பல்கலைக் கழகத்தை தெரிவு செய்யும் உரிமையுண்டு. அவர்கள் விரும்பும் பீடத்தில் கல்வியைத் தொடர்கின்றனர் எதிர்வரும் கல்வியாண்டிலும் மாணவர்களின் அனுமதித் தொகை குறைக்கப்படாமல் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே-இ)

இலங்கையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியும். ஆனால் வந்து சிக்கிய பின் வெளியேற முடியுமா? இந்தியா வந்து சிக்கலில் அகப்பட்டு திண்டாடிய பாடத்தை ஐ. நா. வும் மீண்டும் படிக்க வேண்டுமா? இந்தியா வட, கிழக்கு பகுதியில் நினைத்த மாதிரி எதையும் சாதியாது தோல்வியே கண்டது. இந்தியாவால் முடியாத வேலையை ஐ. நா. வந்து சாதித்துவிடப் போவதுமில்லை.

ஆகவே ஐ. நாவோ வேறு வெளிச்சக்தியோ இலங்கையில் உள்நாட்டுபிரச்சினையில் தலையிடத்தேவையில்லை வெளிநாட்டு சக்திகள் ஏற்கனவே தேவையின்றி தலையிட்டிருந்திராவிட்டால் இந்த இனப் பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கமுடியும். இதை ஐ நா. ஒரு பாடமாக கற்றுக்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு சமாதான சச்சரவுக்கு ஐ. நா தலையிடுவதாயின், முதல் தன் வேலையை வட-அயர்லாந்திலிருந்து ஆரம்பிக்கட்டும். எங்கள் பிரச்சினையை நாங்களே ஜனநாயக முறையில் தீர்க்க வழிவிடவேண்டும் எனவும் கூறியுள்ளது. (கே-இ)

அரசின்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறிவித்த அரசு பின்பு பாதுகாப்புக் காரணமாக அங்கு நடைபெறவிருந்த தேர்தலை பின்போட்டுள்ளது.

அத்தோடு இராணுவம் மன்னார் பகுதிகளில் இருந்து பல கிராமப் பிரதேசத்தை கைப்பற்றி செல்வதையும் பார்த்தால், அரசு இராணுவம் பற்றி கூறும் கருத்துகள் மிகைப்படுத்தப்பட்ட கருத்துக்களாக உள்ளன. (ம-இ)

இலங்கைக்கான
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு எதிராகவே நெதர்லாந்து அரசு இவ்வாறு கூறி வருவதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வாரம் நெதர்லாந்து மனித உரிமைகள் குழுத் தலைவரும், அண்மையில் வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டு உபதலைவருமான பேராசிரியர் கோர்னிலஸ் பிலின்ரமன் தலைமையிலான குழுவொன்று இலங்கை வந்துள்ளது. (இ)

பருத்தித்துறை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பொறுப்பாளர் தலைமையலுவலகத்தில் இருந்து எடுத்துச் சென்று ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து 'வாதுவ' கப்பல் மீண்டும் பருத்தித்துறை துறைமுகம் வந்து பொருட்களை இறக்கும் பணியை ஆரம்பித்தது.

தொடர்ந்தும் கப்பல்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பாதுகாப்பு வழங்குமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எஸ்-சி)

முல்லைத்தீவில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

குப்பை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை நடாத்தியவாறு பட்டிக்குடியிருப்பை நோக்கி முன்னேறினர்.

அன்று பிற்பகல் 1-30 மணியளவில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை வழிமறித்து, தாக்குதல் நடாத்தினர். இதனை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் பலத்த மோதல் இடம்பெற்றது. இம்மோதலை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்

இராணுவத்தினரிடமிருந்து 203 ரக ஷெல் ஒன்றையும் தலைகவசம் ஒன்றையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். (ம-இ)

சித்த மருத்துவத்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவத்துறை மாணவர் தலைவரான நாகலிங்கம் வர்ண குலேந்திரன் நேற்றுத் தமிழில் இவ்வாறு கூறினார். அவரது பேட்டி இலங்கை சேவையில் தமிழில் ஒலிபரப்பப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், சித்த மருத்துவத்துறை கம்பஹா இல்கீழ் கடந்த 9 வருடங்களாக இருக்கின்றது. இது ஒரு துறையாகத்தான் இருக்கின்றது. மாணவர்கள் இத்துறையைத் தனிப் பீடமாக்கக் கோரி, ஆகஸ்ட் 5ம் திகதி தொடக்கம் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர். அதன் பின் ஆகஸ்ட் 11ம் திகதி தொடக்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர் இதன் காரணமாகப் பல்கலைக்கழகத் துணை வேந்தர், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு எம்மைக் கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

இந்தப் போராட்டத்திற்குப் பூரண ஆதரவு உண்டு என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் அமைப்பாளர் எச். எம். என். சேரத் தெரிவித்துள்ளார் எனவும் கூறினார். -ம-இ

மணிவாக்கு

"உண்மைகளைப் பதிவு செய்வதோடு மட்டும் நின்றுவிடாதே. அவற்றின் மூல இரகசியங்களை அறிய முயற்சி செய்"

— இவான் பவ்லவ்.

நமது நோக்கு

நல்ல தருணம்!

சமாதான யோசனைத் திட்டத்துடன் கொழும்பு திரும்பிய அமைச்சர் தொண்டமான் அரசின் பரிசீலனைக்கு அதனை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளார் என்றசெய்தி வந்துள்ளது.

லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களில் உள்ள புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது அமைதித் திட்டம் ஒன்று கையளிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் சமஷ்டி கட்டமைப்பு யோசனையைப் பரிசீலிக்கத் தயார் எனக் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

சாதகமான அறிகுறிகள் காட்டப்பட்டுள்ளன; அரசு விழித்தெழுந்து விரைந்து செயற்பட வேண்டும்.

இலங்கை அரசியலில் நீண்டகாலமாக நிலைத்திருப்பவர் அமைச்சர் தொண்டமான். மலையகத் தமிழரின் தனித் தலைவராகி, சுதந்திரக்கட்சியை ஆதரித்தவர்; தற்போது ஐ. தே. கட்சியை நீண்டகாலமாக ஆதரித்து வருபவர்.

தெரிவுக் குழுவிற்குத் தீர்வுத்திட்டம் சமர்ப்பித்தார். இனவாதிகள் கூச்சலிட்டுக் குழப்பியடித்தனர். எனினும் அவர் மசியவில்லை; சோர்ந்துவிடவில்லை. காலம் கனியட்டும் என்று காத்திருந்தார்!

மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக, இழந்த இறைமையை மீட்பதற்காக, இலங்கைத் தமிழர்கள் பலவிதப் போராட்டங்களை நடாத்தித் தோல்வி கண்டனர். இந்த நிலையில் தான், வைரத்தை வைரத்தால் வெட்டவேண்டும் என்ற ரீதியில் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நியாயத்தின் அடிப்படையிற் போராடுபவர்கள் என்றுமே தோற்றதில்லை என்பது வரலாறு தரும் பாடம்!

இன்று, நீண்டகாலமாகப் போராடிய பாலஸ்தீனியர்களுக்குச் சுயாட்சித் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவிற் சமரசம் ஏற்பட்டுள்ளது. பொஸ்னியாவில் சமரச முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

எனவே மேலும் இழுத்தடித்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு மேலும் இட்டுச்செல்லாது முன்வைக்கப்படும் சமரசத் திட்டங்களைத் திறந்த மனதோடு பரிசீலிக்கத் தென்னிலங்கைத் தலைவர்கள் முன்வரவேண்டும்!

நல்ல தருணமிது, நழுவவிடலாமோ?

புலிகளின் தொடர் தாக்குதல்களினால்
விஜயதுங்கா அரசு தடுமாறுகிறது!

தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மைக்காலமாக போர்க்களத்தில் நிகழ்த்திவரும் பெரும் சாதனைகளினால் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தலைமையிலான சிறிலங்கா அரசு தடுமாறிக்கொண்டிருக்கிறது.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பும் அதனைத் தொடர்ந்து கிளாலிக் கடலிலும், பருத்தித்துறைக்கடலிலும் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் சிங்களப் படையினரையே அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

மண்கிண்டிமலை அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு மீண்டும் பேரதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் என்ன செய்வதென்று தெரியாமலே சிறிலங்கா அரசு திண்டாடிக் கொண்டிருக்கிறது. அரச படைகள் சந்தித்துவரும் தோல்விகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்லும்; அதேவேளை புலிகளின் பலம் பெருகிக்கொண்டு வருகிறது.

இந்நிலையில் அரசு மேலும் யுத்தத்தை தொடர்ந்து தன் கண்ணை தன் கையால் குத்தப் போகிறதா அல்லது இனப் பிரச்னைக்கு தீர்வொன்றைக் காணப்போகிறதா என்ற கேள்வி அரசியல் விமர்சகர்கள் மத்தியில் எழுந்துள்ளன.

அரச படையினருக்கு ஏற்பட்டுவரும் தோல்விகளும், ஆயுத இழப்புகளும் படையினரின் பலவீனத்தையே காட்டுகின்றன. இதேவேளையில் படையினரின் பலத்தை அதிகரிக்க முடியாத நிலையும் அரசுக்கு ஏற்பட்டுவருவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

படைக்கு ஆட்களைத்திரட்டவென விசேட சலுகைகளையும் அறிவித்து கல்வித்தகைமைகளையும் குறைத்து கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்போவதாகவும் பெரிய எடுப்பில் விளம்பரங்கள் செய்யப்பட்டு அண்மையில் தெற்கில் 21 இடங்களில் நடைபெற்ற இராணுவ தேர்முகப்பரீட்சைக்கு குறைந்தளவு தொகையினரே சமூகமளித்துள்ளனர். இது படையில்சேர சிங்கள இளைஞர்கள் பின்னடித்து வருவதனையே காட்டுகின்றது.

அத்துடன் படையிலுள்ளவர்களில் பலர் படைகளைவிட்டு ஓடியுள்ளதுடன் மேலும் பலர் மனம் குழம்பிய நிலையிலே படையில் உள்ளனர். இது போரைத் தொடர்வதற்கான நிலையில் தளம்பல் ஏற்பட்டுள்ளதையே காட்டுகின்றது.

துரை

விடுதலைப்புலிகள் இலக்கம் பேச்சுவார்த்தைகளுக்கு தயார் என்று அறிவித்த போதெல்லாம் அவர்கள் பலவீனமடைந்துள்ளனர். அதனால் தான் பேச்சு நடத்த விரும்புகிறார்கள் எனவே புலிகள் பலவீனமாக இருக்கும் போது அவர்களைத் தாக்கி அழிக்கவேண்டும் என்ற நோக்கில் போரைத் தொடர்வதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும் போதெல்லாம் விடுதலைப்புலிகள் அதனை முறியடித்து பாரிய வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையில் வடபகுதியில் பெரும் படையெடுப்பை நிகழ்த்தும்நோக்கில் யாழ்ப்பாணத்திலுள்ள படைமுகாம்களில் பெருந்தொகையான படைகளைக் குவித்தும் ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்களையும் பெருமளவில் குவித்தும் தரை, கடல், ஆகாய மார்க்கமாக தாக்குதலுக்கு தயாரான போது 1992 ஆகஸ்ட் 8ம் திகதி அராலித்துறையில் வைத்து கொப்பேகடுவ உட்பட பலபடை அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள். இதனால் சிங்கள படையைப் பொறுத்தவரையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டதுடன் போர்முனையில் சரியான வழிகாட்டலின்றி படை வட்டாரங்கள் தடுமாறியது.

தற்பொழுது குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து ஓடிகூட நகரமுடியாத நிலையில் முகாம்களிலேயே படையினர் முடங்கிக்கிடக்கவேண்டியுள்ளது. அத்துடன் மணலாறு, மன்னார், மட்டக்களப்பு, திருமலை போன்ற இடங்களில் எல்லைப்பகுதிகளில் முகாமிட்டுள்ள படையினர் முகாம்களை மூடிவிட்டு செல்லும் நிலையிலே உள்ளனர். மண்கிண்டிமலை தாக்குதலையடுத்து மன்னார் மாவட்டத்தில் 25 மைல் தூரத்தில் நிலைகொண்டிருந்த படையினர் பின்வாங்கிச் சென்றனர். அண்மையில் மன்னார் மருதமடு திரிகைப் பண்ணை இராணுவமுகாம் முற்றாக வாபஸ் பெறப்பட்டு சிலாவத்துறை முகாமிற்கு இங்கிருந்த 80 படையினரும் இடம் பெயர்ந்துள்ளனர். மேலும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் ஊடுருவி அதிரடித்தாக்குதல்களை நடத்தியும் காவலரண்களை தகர்த்தும் ஆயுதங்களை புலிகள் கைப்பற்றி வருகிறார்கள்.

இந்நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் மீது பாரிய படையெடுப்பை நடத்த சிறிலங்கா படையினர் அண்மைக்காலமாக ஈடுபட்டு வருவது தெரிய வருகிறது சமீபத்தில் திடீர் ஊரடங்குச்சட்டத்தை பிறப்பித்து மாதகல், தெல்லிப்பழை இயக்கச்சி ஆகிய முகாம்களில் இருந்து விமானப்படை, கடற்படை உதவியுடன் இராணுவம் முன்னேற முற்பட்ட போது விடுதலைப்புலிகள் விரட்டியடித்துள்ளனர்.

மண்கிண்டிமலையில் வீசிய புயல்காற்று ஓயமுன்னர் கிளாலி மற்றும் பருத்தித்துறை கடல்களில் வைத்து கடற்படைக்கு பெரும் இழப்பையும் அதிர்ச்சியையும் விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியுள்ளனர். இத்தாக்குதல்களில் நான்கு அதிகாரிகள் உட்பட இருபதிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் 'டோரா' படகு ஒன்றும் இருபீரங்கிப் படகுகளும் தகர்க்கப்பட்டதுடன் பெறுமதிமிக்க ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

தொடர்ந்து தரைத்தாக்குதல்களில் வெற்றிக்கொடிகளைப் பறக்கவிட்ட விடுதலைப் புலி வீரர்கள் இன்று கடற்போரிலும் வெற்றிவாகை சூடி வருகிறார்கள்.

போர் முனைகளில் புலிகள் வெற்றிபெற்று வருகிறார்கள். படையினர் தரப்பில் பலத்த இழப்பு ஏற்படுகிறது. ஆயுதங்களும் யுத்த தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டு வருகின்றன. பாதுகாப்புச் செலவினம் பன்மடங்காக அதிகரித்துள்ளது. சிங்கள இளைஞர்கள் படைகளில் சேர பின்னடித்து வருகிறார்கள் படையிலுள்ளவர்களும் தப்பி ஓடுகிறார்கள், இந்நிலையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியும் என்று அரசநம்பி யுத்தத்தை தொடர்வது தங்களுக்குத் தாங்களே சவக்குழி வெட்டும் நிலையையே அரசுக்கு ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

26,000 குடும்பங்கள் மீள குடியமர்த்தப்படும்

(கொழும்பு)

அகதி முகாம்களில் வாழும் 26,000 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையைப் புனர்வாழ்வு புனர்நிர்மாண சமூக நலத்துறை அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ். பி பத்துசேன இது தொடர்பாக தெரிவிக்கையில் கூறியதாவது:- ஐந்துபேர் கொண்ட குடும்பமொன்றிற்கு தலா 315 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

அமைச்சு வகுத்த திட்டத்தின் கீழ் மட்டு மாவட்டத்தில் 12,000 குடும்பங்களும், திருமலையில் 10,000 குடும்பங்களும் அம்பாறையில் 400 குடும்பங்களும் மீளக்குடியமர்த்தப்பட இருக்கின்றன. (ரி)

தொலைத் தொடர்பு ஊழியருக்கு ஆடி, ஆவணி மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் தொலைத் தொடர்பு இலாகாவைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் கடந்த ஆடி, ஆவணி இருமாத வேதனமும் இன்று வரை கிடைக்கவில்லை.

கொழும்பில செயல்பட்டு வரும் தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் கடித மூலம் தொடர்பு கொண்டும் இன்று வரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (154)

3 மாதம் பாடசாலைகளுக்கு சமூகமளிக்காத மாணவர் நீக்கப்பட வேண்டும்

(வட்டுக்கோட்டை)

ஒவ்வொரு பாடசாலைகளிலும் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக சமூகமளிக்காத மாணவர்களது பெயர்களை இடாப்பிலிருந்து நீக்க வேண்டுமென பண்டத்தரிப்புக் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அண்மையில் நடைபெற்ற கொத்தணி அதிபர்களுக்கான கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடசாலைக்கு எண்பது வீதமான நாட்கள் வருகை தந்திருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (139)

பஸ் கட்டண உயர்வுக்கு மாகாணசபை எச்சரிக்கை

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ்கட்டணத்தை 30 சதவீதமாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ்கட்டணத்தை அதிகரிப்பார்களேயானால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதை அனுமதிப்பத்திரங்களை மேல் மாகாண சபை ரத்துச் செய்துவிடும் என மேல்மாகாணசபை போக்குவரத்து அமைச்சர் ஜனாப் ஏ. எச். எம், பௌஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டீசல் விலை அதிகரிக்கப்படாதிருப்பதாலும். பஸ் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் விலை அதிகரித்திருப்பதாலும் பஸ் கட்டணங்களை 50 சதவீதம் அதிகரிக்க வேண்டியநிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

எனினும் பயணிகளின் நன்மை கருதியே அந்தக் கட்டண அதிகரிப்பு 30 சதவீதமாக குறைக்கப்பட்டிருப்பதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (இ)

வாயுச் சுத்தம் வானத்தாலாகும்!

இராசிபலன்

02-09-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 17)

பிரதமை மு. ப. 10-09 வரை. பூரட்டாதி மு. இ. 9-37 வரை. இராகுகாலம் நண்பகல் 1-35 முதல் 3-05 வரை, சுபநேரம் காலை 7-35 முதல் 9-05 வரை, சித்த யோகம்,

மேஷம், சுபச்செய்தி, தனலாபம், தெய்வ வழிபாடு

இடபம்: பிதாவழி நினைவு, மாதர் நட்பு, பயணம்.

மிதுனம்: தொழில் யோசனை, காரிய தடை, அலைச்சல்,

கடகம்: குடும்ப கலவரம், மனவேதனை, பிறர் தொல்லை.

சிங்கம்: நல்லுறவு, பெரியோர் அறிவுரை, சகோதர பாசம்.

கன்னி: நண்பர் சேர்க்கை, கருத்துவேற்றுமை, பொதுப் பணி.

துலாம்: பிறர் கோபம், தொழில் நஷ்டம், அமைதியின்மை.

விருச்சிகம்: வெளித்தொடர்பு, தந்திரம், தகாத நட்பு.

தனுசு: மனக் கோட்டை, தனசிந்தை, மனத் துணிவு.

மகரம்: கடன்சுமை, மார்பு வலி, குடும்ப தொல்லை.

கும்பம்: வாக்குமேன்மை, இனசன மகிழ்ச்சி, தெய்வ சிந்தனை.

மீனம்: பணியால் தலைசுற்று, தேகபீடை, புதிய கவலை.

ஜோஸ்யர்

வடக்கு-கிழக்குப் பகுதி தனிநாட்டை நோக்கி சிறிது சிறிதாக நகர்ந்து கொண்டிருக்கிறது

- 'லங்கா தீப'விற்கு குமார் பொன்னம்பலம் பேட்டி -

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தனிநாட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதென்று தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் 'லங்காதீப' என்ற சிங்கள பத்திரிகைக்களித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அப் பேட்டி இங்கே கேள்வி பதில் வடிவில் தரப்படுகிறது.

...கருதுகிறீர்களா?

பதில்: அந்தப்பிரதேசத்தில் அதாவது வடக்கு- கிழக்கில் வாழ்பவர்கள் அது ஒரு சாதாரண விடயம் என்று தான் நினைக்கிறார்கள். 1977ம் ஆண்டுத் தேர்தல் மூலம் அந்தப் பிரதேசத்து மக்களில் 85 சதவீதமானோர் வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு தனிநாடு தான் தீர்வு என்று தீர்ப்பளித்துள்ளார்கள். இதனால் அவர்கள் தனிநாட்டை ஒரு சாதாரண விடயமாகவே கருதுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் மிகவும் பலம் வாய்ந்தவர்கள்

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: நான் இதைத்தான் சொல்ல முடியும். விடுதலைப் புலிகள் மிகவும் பலம் வாய்ந்தவர்கள் அவர்கள் கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்துக்கு எதிராகவும், இந்திய அமைதிப் படைக்கு எதிராகவும் போர் புரிந்ததை இதை நாங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எனது கருத்துப்படி கடந்த 50 வருட காலமாக இலங்கையில் இனப்பிரச்சினை இருந்து வருகின்றது. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுக்கவில்லை. 1970ம் ஆண்டு தொடக்கம் வடக்கு- கிழக்கு இளைஞர்கள் இவ்வை

பிரச்னையை தீர்ப்பதற்கு ஐந்து நாட்களே போதும்

ஆரம்ப காலத்தில் அவர்கள் இப்படி உத்வேகமாக நடந்து கொள்ளவில்லை. அரசாங்கத்தின் நிலைப்பாட்டால் அவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அரசு செல்லும் வழி நல்லதாக இருக்க வேண்டும். அரசு ஏமாற்றத் தொடங்கினால் அவர்கள் அதற்கு எதிராகவே நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

மக்களோடு ஒன்றுசேர முடியாது என்று எண்ணினார்கள். இதனால் 1972ம் ஆண்டு தனிநாடு கோரும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் 15 வருட காலம் ஆட்சியில் இருந்துள்ளது. அதுவரை இவர்களால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியவில்லை இன்று தனிநாடு

வட-கிழ. சட்டப்படியற்ற தனியான பிரதேசம்!

கேள்வி: அவர்கள் சரியான வழியில் நடந்து வருகிறார்கள் என்பது போன்று பதிலளிக்கிறீர்களே அவர்களின் நோக்கம் என்ன?

பதில்: தனிநாடு தான்.

கேள்வி; தனிநாடு என்பது ஒரு சாதாரண விடயம் என்று

கோரும் நிலைக்கு இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது இதைநான் பயத்தோடு கூறவில்லை. இந்தக் கருத்துவரைக் சிங்கள மக்கள் கோபமடையக்கூடும். ஆனால் நான் உண்மையைக் கூறுகின்றேன்.

கேள்வி: இப்பொழுது இலங்கையில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதப் பிரச்சினை என்று கருத்துக்கள் நிலவுகின்றன. அதுபற்றி...?

விஜயதுங்க காலத்தில் தீர்வுக்கு வழியில்லை!

பதில்: அரசு இப்படிக் கூறுகிறது. 50 வருடங்களாக இனப்பிரச்சினை பற்றி பேசப்பட்டுவருகின்றது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு 50 வருடங்கள் தேவையில்லை. ஐந்து நாட்களே போதுமானது. திருப்பித் திருப்பித் இதைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதினால் வெறுப்பு ஏற்படுகின்றது.

காமினி ஜயசூரிய போன்றவர்கள் இலங்கை முழுவதும் பௌத்தர்களுக்குரிய நாடு என்று சொல்கிறார்கள். அப்படியானால் போராட்டத்தின் மூலம் தனிநாடு பெறவேண்டியதுதான் வழியாகின்றது.

கேள்வி: உங்கள் கருத்துப்படி இலங்கை அரசு தனிநாட்டுக்கு உடன்படும் என்று நினைக்கிறீர்களா?

பதில்: அரசாங்கம் இதற்கு உடன்படாது. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணாது போவதால் வடக்கு- கிழக்கு தனிநாட்டை நோக்கி சிறிது சிறிதாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கம் இப்போதுவடக்கு செல்ல முடியாத நிலை. தேர்தல்கள் நடாத்த முடியாது. அரசியல் ரீதியாக எதையும் சாதிக்க முடியாது. இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது, வடக்கு- கிழக்கு சட்டப்படியற்ற தனியான பிரதேசம் போலத்தானே

இதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கும் அப்படியானால் அரசாங்கம் உண்மையாக நடந்து கொள்ளவேண்டும்.

கே: புதிய ஜனாதிபதி டி.பி விஜயதுங்க காலத்தில் இந்தப் பிரச்சினை தீரும் என்று கருதுகிறீர்களா?

ப: ஜனாதிபதி விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் இந்தப் பிரச்சினை தீர்வதற்கு வழி தென்படுவதாக இல்லை. அரசாங்கம் முதலில் பதவிஏற்றபோது இனப்பிரச்சினை விடயத்தில் ஆக்கபூர்வமான செயல்பாடுகள் நிகழும் ஒன்று எதிர்பார்த்திருந்தோம் என்றது. பிரதமமந்திரியும் இளைஞராக இருக்கிறபடியால் இந்தப் பிரச்சினைக்கு அவரும் முகம் கொடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தோம்.

வடக்கு -கிழக்கு பகுதி நிரந்தரமாக இணையவேண்டும்

நாம் எதிர்பார்த்தது மாதிரி இடம்பெறவில்லை இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை பயங்கரவாத பிரச்சினைதான் இருக்கின்றது என்று கூறி வருகிறார்கள். இதனால் தமிழ்மக்கள் வேதனை அடைகின்றார்கள். இப்பிரச்சினை பற்றி கொழும்புத் தமிழர்களுக்கு அக்கறை இல்லை ஏனென்றால் அவர்கள் அந்தப் பிரதேசத்தில் இருக்கவில்லை. அண்மையில் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அரசியலமைப்பை சீர்திருத்துவதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு தனியே அரசியலமைப்பில் சில திருத்தங்களை முன் மொழிவதற்குப் பதிலாக முழுமையாக அரசியலமைப்பை மாற்றி அமைப்பதற்கு ஏற்றவாறு அமைக்கும்படி வேண்டுவேன்.

கே: இனப்பிரச்சினை தீர்வுக்கு உங்கள் கருத்து என்ன?

ப: எனது கருத்துப்படி வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணையவேண்டும் பின்பு பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைக்கு தீர்வுகாணவேண்டும்

கே: தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து இனப்பிரச்னைக்கு ஏதும் தீர்வு எட்ட முடியுமா?

ப: நான் இதை வரவேற்கவில்லை. எல்லாக் கட்சிகளும் கொண்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் முடியாத விடயத்தை தேசிய அரசாங்கத்தால் எப்படி சாதிக்க முடியும்.

தமிழில்: மணிசேகரன்

காரணம் எதுவுமின்றி 48 நாள் தடுத்து வைக்கப்பட்டேன்

கொழும்பில் விடுதலையான இளைஞர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்று அங்கு தங்குபவர்கள் ஸ்ரீலங்கா பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்படும் சமயத்தில் பலவிதக் கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும், இன்னல்களுக்கும் உள்ளாகி வருகின்றார்கள். காரணமெதுவுமின்றித் தடுப்புக் காவலில் வைக்கப்படும். இவர்கள் படும் இன்னல்கள் பலவிதமாக இருக்கின்றன.

இவ்விதம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விடுதலையான யாழ். இளைஞர் ஒருவர் தனது அனுபவத்தைப் பற்றிக் கூறியதாவது:- "எவ்வித காரணமுமின்றி நாற்பத்தெட்டு நாட்கள் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான் கொழும்பில் ஒரு தனியார் விடுதியில் வெளிநாட்டுப் பிரயாணமொன்றை மேற்கொள்வதற்காக தங்கியிருந்தேன். ஒரு நாள் இரவு விடுதியைச் சுற்றிவளைத்த ஸ்ரீலங்கா பொலிசார் என்னுடன் சேர்த்துப் பதினேழு பேரைக் கைது செய்து கூட்டிச் சென்று காவலில் வைத்தார்கள்.

விசாரணை என்ற ரூபத்தில் பலவித சம்பந்தமில்லாத கேள்விக் கேட்டுத் துன்புறுத்தல் செய்தார்கள். பதிரையில் இருந்தபடியே அவர்களின் அடிகளைத் தாங்கிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது நாரஹேன்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் ஒரு சின்னஞ்சிறிய அறையில் இருபத்திமூன்று பேரை அடைத்துவைத்து விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்தார்கள்.

சில வேளைகளில் எம்மைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பிரதிநிதிகள் வந்து பார்ப்பார்கள் அந்த வேளைகளில் பொலிசார் துன்புறுத்தலைச் சிறிது தணிப்பார்கள். எம்மில் பொலிசாரின் அடிகளால் காயமுண்டாகி இருப்பவர்களை இச்சங்கப் பிரதிநிதிகள் பார்வையிடாதவாறு தடுத்து விடுவார்கள்.

தமிழ் இளைஞர்களுக்கு துன்புறுத்தல்களை செய்யவேண்டுமென்ற நோக்குடனேயே ஸ்ரீலங்கா பொலிசார் இவ்விதநடவடிக்கைகளை விசாரணை என்ற போர்வையில் செய்து வருகின்றார்கள் என்பது எனது நாற்பத்தெட்டு நாட்கள் தடுப்புக்காவல் அனுபவத்தில் அறிந்துகொள்ள முடிந்தது என்று பரிதாபத்துடன் கூறினார். (162-பி)

தமிழீழ நீதிமன்றில்

அனுமதிப்பத்திரமின்றி கள் வைத்திருந்தவருக்கு 800 ரூபா அபராதம்

(உடுவில்)

முக்காற் போத்தல் கள்ளை அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் வைத்திருந்த குற்றத்துக்காக சங்கானையைச் சேர்ந்த நவரத்தினம் செல்வராசா என்பவர் எழுபதைந்து ரூபா அபராதப் பணமாக செலுத்தினார்.

அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் கள்ளு வைத்திருந்தமைக்காக சங்கானை காவல்துறை பொறுப்பதிகாரியினால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதியாளர் ச. பூவேந்தன் எழுபத்தைந்து ரூபா அபராதம் விதித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு நீதியாளர்கள் க. தேசிகன், ச. பூவேந்தன், உ ஒப்பிலான் ஆகியோர் முன்னிலையில் சங்கானை காவல்துறையைச் சேர்ந்த குற்றவியல் வழக்குவிசாரணைகள் நடைபெற்றன.

அனுமதிப் பத்திரமின்றிஒரு போத்தல் கள்ளு வைத்திருந்தமைக்காக பொன்னுத்துரை பத்மநாதன் என்பவருக்கும் பாலு செல்வம் என்பவருக்கும் தலா 100ரூபா அபராதமும் பத்து போத்தல் கள்ளு வைத்திருந்தமைக்காக கணபதி பாலசிங்கம் என்பவருக்கு எண்ணூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

—109-பி

மோட்டார்பம் திருட்டு வழக்கு: ஒருமாத சிறையும் 700 ரூபா அபராதமும்

(உடுவில்)

சண்முகநாதன் சிவகுமார், பத்மநாதன் பத்மஸ்ரீ ஆகிய இருவரும் ஆகஸ்ட் 2-ந் திகதி துரைசாமி ஜெயசீலன் என்பவருக்குச் சொந்தமான மூவாயிரம் ரூபா பெறுமதியுடைய அக்சற்றீன் மோட்டார் பம்பை திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

நீதியாளர் குற்றவாளிகள் இருவருக்கும் தலா எழுநூறு ரூபா அபராதமும், ஒருமாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். மோட்டார் பம் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது. -109

பட்டமளிப்பு விழா

(உடுவில்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பன்னிரெண்டாவது பொதுப்பட்டமளிப்பு விழா இம்மாதம் 11ஆம் திகதி நடைபெற உள்ளது. விருதுகள் இரவு என்னும் நிகழ்ச்சி 23ம் திகதி நடைபெறும் என தெரிய வருகிறது. (109)

துர்க்கையம்மன் ஆலயம் மீதான

ஷெல் தாக்குதல் குறித்து இந்து அமைச்சுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் மீது அதன் வருடாந்த மகோற்சவ காலத்தில் சிறிலங்கா அரச இராணுவம் தொடர்ச்சியாக மேற்கொண்ட ஷெல் தாக்குதலை கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைகின்றோம். இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபை யாழ் அரச அதிபர் ஊடாக இந்து கலாசார இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரின் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வலிகாமம் வடக்கு சைவ மக்களைப் பொறுத்தவரை அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் என்பனவற்றில் வழிபாட்டுரிமைகள் மறுக்கப்பட்டபின் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேஸ்தானமொன்றே இவர்களின் புகலிடமாயும், சாந்தி பீடமாயும் மிளிர்ந்தது. இன்று அது இதையத்தைக் கசக்கிப் பிழியும் காட்சியாகிவிட்டது. தொடர்ந்து துயர்தரும் நிலையமாகிவிட்டது.

அமைதியான முறையில் பக்தி பூர்வமாக நடைபெற்ற மகோற்சவத்தில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு பக்தர்களை பலி கொண்டதும், ஆலயக் கட்டிடங்களை சேதமாக்கியாதுமன இக் காட்டுமிராண்டிச் செயலுக்குப் பொறுப்பானவர்களை எமது சபை வன்மையாகக் கண்டிக்கின்றது. அண்மைக் காலமாக வணக்கத் தலங்கள்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் சைவ கலாசாரத்தைத் திட்டமிட்டு அழிப்பவையே நோக்கமாகக் கொண்டவை என்பதையே தெட்டத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. தொடர்ச்சியான இவ் வெறி வேட்டையைத் தடுத்து நிறுத்த முடியாத தங்கள் இயலாமைக்காக நாம் அனுதாபப்படுகிறோம்.

உடனடியாக அரசு தொடர்புகொண்டு மிருகத்தனமும், வெறித்தினமும் மிக்க கொடூரமான இச்செயலிற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவும், எதிர்காலத்தில் இப்புனித பிரதேசத்திற்கு வழிபடவரும் பக்தர்களின் உயிருக்கும், ஆலய உடைமைகளுக்கும் பங்கமேற்படாமலும் அநியாயமாக உயிரிழந்த பக்தர்களிற்கு உரிய நட்ட ஈடு வழங்கவும், பாதிக்கப்பட்ட ஆலயப் பகுதிகளை புனரமைப்புச் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

இதேவேளை இந்து குருமார் ஒன்றியம் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீதும் ஏனைய சைவ ஆலயங்கள்மீதும் அண்மைக் காலங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

ஆலய உற்சவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலங்களில் ஆலயங்கள்மீதும் அதன்சுற்றாடலிலும் குண்டுகளை வீசித்தாக்கும் செயல் மனிதாபிமானமற்றது. அடியார்களின் மனநிலையைபாதிக்கும் வகையிலும் அவர்களின் வழிபாட்டுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய முறையிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இக்குண்டுத்தாக்குதல்களை எமது ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்து ஆலயங்கள் இந்துக்களால் புனிதமாக பேணிப் பாதுகாக்கப்படுபவை. அவற்றின் மீதான தாக்குதல்கள் இந்துக்களை அமைதிக்கும் செயலாகும். இந்த நாட்டில் உள்ள ஏராளமான இந்துக்கோயில்கள் ஏற்கனவே இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலானவை இன்னமும் பூட்டப்பட்டு பூசைகள் நடைபெறாத நிலையில் உள்ளன. எல்லா மதங்களையும் சமமாகப் பாதுகாப்பது இலங்கை அரசின் கடமையாக இருந்தும் இந்துக்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்வது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். இந்துசமயப்பேரவை இத்தகைய அத்துமீறல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இனிமேலும் இவ்வாறான அத்துமீறல்கள் நடைபெறாதிருப்பதற்கு ஆவன செய்து கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

வெளிநாட்டு அகதிகள் வருகை

ஜெர்மனியில் குறைந்து வருகிறது

(பிராங்பேர்ட்)

ஜெர்மனியில் அகதிகள் வருகை வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு அகதிகளை கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்டவிதிகள் அமுலுக்கு வந்ததையடுத்தே இவர்களின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது.

முன்னர் நாளாந்தம் 200 அகதிகள்பிராங்பேர்ட் விமான நிலையத்தில் வந்திறங்கினர். தற்போது 30 பேருக்கு குறைவாகவே வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு வரும் அகதிகளை இப்போது விமானநிலையத்தில் வைத்தே விசாரணை நடத்தப்படுகிறது. இதில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவோர் திருப்பி அனுப்பப்படுகின்றனர். (71-ரி)

மலிவு விலையில் ரயர், ரியூப்

(உடுவில்)

சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளைகளில் மலிவான விலையில் சைக்கிள் ரயர்கள், ரியூப்புகள் மற்றும் வாளிகள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இங்கு ரயர் ரியூப்புக்கள் நூற்றுத்தொண்ணூறு ரூபாவுக்கும், அங்குலத்துக் இருபத்தி மூன்றரை ரூபா வீதம் பல அளவுகளிலான வாளிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. (109)

கிராமிய வளங்களை பயன்படுத்த நடவடிக்கை

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் கிராமிய வளங்களை பயன்படுத்தி கிராமமக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த மூன்றுவருட காலப் பகுதியில் இவ்வாறு கிராமிய வளங்களை பயன்படுத்தி மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளூடாக மேற்கொள்ளப்பட உள்ளன.

இவ்வாறான மூன்றாண்டு கால செயற்திட்டங்களை வகுக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார். (109)

வீரப்பன் குழுவைச் சேர்ந்த 11 பேர் கைதாகினர்

(சென்னை)

சந்தனக்கடத்தல் வீரப்பனின் சகாக்கள் 11 பேர் சத்தியமங்கலம் காட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திரு. தேவாரம் தலைமையிலான தமிழ்நாடு கிறப்பு காவல்படை இவர்களைக் கைது செய்துள்ளது. இவர்களிடம் இரட்டைக்குழல் துப்பாக்கி ஒன்றும், இரண்டு ரிவால்வர்களும், ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பணமும் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை வீரப்பன் கும்பலுக்கு உள்ளூர் கோடீஸ்வரர் ஒருவர் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கொடுத்து உதவி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வீரப்பனின் சகா ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் தமிழக அதிரடிப் பொலிசார் மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்த மூன்று பொலிசாரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படு தீவிர கிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சேலம் மாமரத்துக்காட்டில் பொலிஸ் உயர் அதிகாரி திரு. தேவாரம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி தேடுதல் மேற்கொண்டபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. —க-ரி

வாளி பெறச்சென்ற விவசாயிகள் ஏமாந்தனர்

(பருத்தித்துறை)

விவசாயிகளிடமிருந்து முற்பணம் பெறப்பட்டுக் கமநல சேவைத் திணைக்களத்தால் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த வாளிகளைப் பெற புலோலி கமநலசேவை நிலையத்திற்குச் சென்ற சுமார் 650 விவசாயிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

கடந்த மே மாதம் இவ்விவசாயிகள் வாளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு புலோலி கமநலசேவை நிலையத்தில் முற்பணம் செலுத்தியிருந்தனர். கப்பலில் வந்த வாளிகள் கடந்த மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை விவசாயிகளுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை அறிந்த விவசாயிகள் திங்கட்கிழமை கமநலசேவை நிலையத்திற்குச் சென்றனர். வாளிகள் வழங்கப்படுவதற்கான இலக்க துண்டுகளும் வழங்க ஊழியரொருவரால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. பின்னர் வாளிகள் தற்போது வழங்கப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டு இலக்கத் துண்டுகள் திருப்பி வாங்கப்பட்டனவாம். இதனால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். (52-சி)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கத்துவம் பெறாத சகல சமூகசேவை அமைப்புக்களையும் தொண்டர் நிறுவனங்களையும் இணையத்தில் அங்கத்துவம் பெறாத சகல சமூகசேவை அமைப்புக்களையும் தொண்டர் நிறுவனங்களையும் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப் பணியகத்தில் எதிர்வரும் 4ம் திகதி காலை 8-30 மணியளவில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு சமூகம் தருமாறு புனர்வாழ்வு கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (ரி)

11,000 ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கோவை வருகிறது

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் கிவில் ஓய்வூதியம் பெற்று வருபவர்களின் 11,000 ஓய்வூதியக் கோவைகள் கொழும்பில் இருந்து யாழ். செயலாத்துக்கு வந்து சேரவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் திரு. து. வீரசிங்கம் கொழும்பில் மேற்கொண்டு வந்துள்ளார். இக்கோவைகள் யாவும் கப்பல் மூலம் இங்கு வந்து சேர்வதற்காக கொழும்பிலுள்ள ஓய்வூதியத் திணைக்களத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவை இங்கு வந்து சேர்ந்ததும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதியக் கோவைகளையும் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7 -ரி)

செங்கை ஆழியான் கலாநிதியானார்

(உடுவில்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் பிரபல எழுத்தாளர் திரு. க. குணராசாக்கு (செங்கை ஆழியான்) கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

1991 ம் ஆண்டில் வட இலங்கையின் குடியேற்றத்திட்டங்களும் காணி அபிவிருத்தியும் என்னும் விடயமாக திரு குணராசாவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைக்காக புவியியல்துறையில் இவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதம் பதினொராம் திகதி நடைபெறவுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இவருக்குரிய பட்டம் உத்தியோகபூர்வமாக வழங்கப்படும். (109)

ஓய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

ஆகஸ்ட் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ் செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. (71)

வட்டுக்கோட்டையில் பிரதேச கல்வி அலுவலகம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்தணி அலுவலகம் வெகுவிரைவில் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச கல்வி அலுவலமாக இயங்கவுள்ளது.

இப்பிரதேசக் கல்வி அலுவலகத்தை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் மேல் மாடி மண்டபத்தில் அடுத்த மாதம் 1ம் திகதிமுதல் நடாத்துவதற்கானதுரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் அலுவலகம் இம்மாத நடுப்பகுதியில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மேல் மாடி மண்டபத்தில் இயங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (139-ரி)

இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஜயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்

எதிர்வரும் 11ம் திகதிசனிக்கிழமை காலை 10 00 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும். (154)

கொடியேற்ற உற்சவம்

மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் கோவில் கொடியேற்றம் இம்மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

செப்டம்பர் மாதம் 11ம் திகதி வேட்டை திருவிழாவும் 13ம் திகதி திங்கட்கிழமை சப்றமும், 14ம் திகதி தேர்த் திருவிழாவும், 15ம் திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெறும்

கொடியேற்ற விழா அன்று ஐந்து பத்தாண்டுகள் ஐங்கரன் மா விழாவும் நீள் தொடர் பொன் விழாவும் மாவை மகாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாத குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ம)

அடுத்த வருட யுத்தத்திற்கு ராணுவம் தயாராகிவருகிறது

(கொழும்பு)

அடுத்த வருட ஆரம்பத்திலான யுத்தத்திற்கு இராணுவம் தன்னை தயார்படுத்தி வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் 'சண்டே ஜலன்ட்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

அந்த அதிகாரி மேலும் கூறுகையில்; அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தில் மட்டும் ஒரு லட்சம் பேர் அங்கம் வகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அடுத்து வரும் மாதங்களில் சுமார் 10,500 பேரை இராணுவத்தில் சேர்க்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

படையணியில் மேலும் பத்து பட்டாலியனை ஏதோவொரு வகையில் சேர்க்க முயற்சி நடைபெறுகிறது. இவ்வாறு சேர்க்கப்படும் பத்து பட்டாலியன்களும் 3 மாத தீவிரபயிற்சியின் பின் வடக்கு கிழக்கு யுத்த முனைக்கு உடனடியாக அனுப்பப்படுவர்.

மிகக் குறைந்தளவு தகைமையுடன் சிப்பாய்களை படைகளில் சேர்ப்பது பிரச்னைக்குரியதுதான். எனினும் தற்போதைய நிலையில் இதனை பொருட்படுத்த முடியாது. யுத்தமுனைக்கு ஆட்பலம் உடனடியாக தேவைப்படுகிறது. இதனை பூர்த்தி செய்த பின், பெறப்படும் நவீன படைத்தளபாடங்களுடன் அரசபடைகள் புலிகளுக்கு எதிராக தீவிர தாக்குதலை தொடுப்பார்கள் என்றார். (கி)

கிளாலி படகோட்டிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கிளாலி படகோட்டிகளுக்கான அனுமதிப்பத்திரம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை, கிளாலி பயணிகள் போக்குவரத்து காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் படகு சேவை காலங்களில் படகோட்டிகளுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களே படகோட்டிகளாக செயற்படமுடியும்.

எனவே நாளை கிளாலி படகு சேவையில் ஈடுபடும் அனைத்து படகோட்டிகளும் தங்களின் சுயவிபரங்களுடனும் வழங்கப்பட்டபடகு இலக்கங்களுடனும் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (கி)

இந்திய அரசுக்கு எதிராக பி. ஜே. பி. போராட்டம்

(புதுடில்லி)

இந்தியாவில் அரசியலில் இருந்து மத அடிப்படையிலான கட்சிகள் வெளியேற்றப்படவேண்டும் என்ற அரசின் திட்டத்தை எதிர்த்து, 15 நாட்களுக்குத் தொடர்ச்சியான போராட்டத்தை நடத்தப்போவதாக பாரதீய ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

பொது வாழ்க்கையில் இருந்து மதத்தை வெளியேற்றுவது என்பது தவறான கொள்கையாகும் என பி. ஜே. பி. தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்தார்.

மதத்தின் பேரால் அரசியல் கட்சிகள் வாக்குகள் பெறுவதை ரத்துச் செய்யும் அரசின் திட்டத்தைத் தாம் எதிர்ப்பதாகவும், அரசின் திட்டம் பி. ஜே. பி.யைச் சீர்குலைக்கும் செயலாகும் எனவும் திரு அத்வானி கூறினார். -கே-கி

அரசியல் ராணுவ தவறான கணிப்பீடுகளால் யுத்தத்தில் தோல்வி நிலை

(கொழும்பு)

அரசியலிலும் இராணுவ ரீதியிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் தவறான கணிப்பீடுகள் யுத்தத்தின் நிலையைத் திசை திருப்பி, அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தி வருவதாக இராணுவத் தலைமைப் பீடம் கருதுவதாகச் 'சண்டே ஜலன்ட்' பத்திரிகை தெரிவிக்கிறது.

கடந்த 10 வருடப் போரில் பல்லாயிரக்கணக்கான படையினர் உயிரிழந்ததுடன், பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்து ஊனமடைந்துள்ளனர். இந்நிலையில் அரசியல்வாதிகளாலும், இராணுவ ரீதியிலும் மேற்கொள்ளப்படும் தவறான கணிப்பீடுகளால், மேலும் கிங்கள இளைஞர்களை யுத்தத்தில் ஈடுபடுத்திப் பெரும் இழப்பை ஏற்படுத்த முடியாது.

இதனால் பெரும் நெருக்கடி நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதுடன், பின்னடைவும் ஏற்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளனவாம். -கி

கொலைக் கும்பல் ஒன்று தெற்கில் பிடிபட்டது

(கொழும்பு)

தென்பகுதியில் பணத்துக்காக கொலை செய்த கும்பல் ஒன்றை பொலிசார் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தக் கொலைக் கும்பலில் பொலிஸ் அதிகாரியும், வேறு சில பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்கி உள்ளனராம். இந்த பொலிஸார் கணமில்வில என்ற கிராமத்தில் வசித்து வந்த இரண்டு நபர்களை பணத்திற்காக கொலை செய்துள்ளார்கள்.

கொலை செய்ததற்காக 75,000 ரூபா பெறப்பட்டதோடு இந்தக் கொலைக்காக 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பேரம் பேசப்பட்டது என்றும் கூறப்படுகிறது. (ம-கி)

கட்டுநிதி வரவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் வழங்குவதற்கு திருகோணமலையிலுள்ள வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிலிருந்து யாழ். இலங்கை வங்கிக்கு கட்டுநிதி வந்துசேரவில்லை. (72)

வடக்கில் தொடர்ந்து விமானத் தாக்குதல்

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளின் நிலைகளின் மீது வான் தாக்குதல் நேற்றும் இடம் பெற்றதென்று கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

அண்மைக்காலமாக ஸ்ரீ லங்கா வான் படையினர் பொதுமக்கள் வாழும் குடிமனைகள் மீது தாக்குதல் நடத்தியதினால் பொதுமக்கள் உயிரிழப்பும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-கி)

கிளாலியில் நேற்றிரவு புக்காரா எரிகுண்டு வீச்சு

(எழுதுமட்டுவாள்)

கிளாலிப் பகுதியை நேற்றிரவு 8-30மணியளவில் வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள், புலோப்பளை இறங்கு துறைப் பகுதியில் எரிகுண்டுகளை வீசித் தாக்கியதில் அப்பகுதி ஒரே நெருப்பு மயமாகக் காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை ஹெலிகொப்ரர் ஒன்று இப்பகுதியில் பல தடவை வட்டமிட்டு ரோந்து சுற்றியது.

ஒரு புக்காரா எரிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்ட போது மற்ற புக்காரா கலிபர் தாக்குதலை மேற்கொண்டதாம் இதேவேளை இவ்விமானங்கள் மீது புலிகளும் தாக்குதலை மேற்கொண்டனராம். (170-கி)

உதவிப் பணம்

(கொழும்புத்துறை)

கோப்பாய் பிரதேசசெயலக பிரிவுக்கு உட்பட்ட மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்களுக்கான பெப்ரவரி, மார்ச் இரு மாதங்களுக்குரிய உதவிப் பணத்தை அந்தந்தப் பகுதித் தபாலகங்களில் நேரில்சென்று பெற்றுக்கொள்ளமுடியும் என கோப்பாய் பிரதேச செயலாளர் திரு இ. இலங்கோவன் தெரிவித்துள்ளார். (154)

இடைக்கால நிர்வாகம் சிறிமா மௌனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைவது பற்றிச் சுதந்திரக் கட்சியினர் மௌனம் சாதித்துவருகின்றனராம்.

அண்மையில் இது பற்றி ஆராயத் திருமதி சிறிமா தலைமையில் கூடிய சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, எது கூட்டம் கலைந்ததாம். (கி)

புலிகளைப் பாதுகாக்க இந்தியா ஒப்பந்தம்

(புதுடில்லி)

இந்தியாவின் வடக்குப்பகுதியில் தோல் மற்றும் எலும்புக்காக பெரிய எலிகள் மற்றும் புலிகள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக சீனாவுடன் இந்தியா 'புலிப் பாதுகாப்பு ஒப்பந்தம்' ஒன்றைக் கைச்சாத்திட ஆலோசித்துவருகிறதாம்.

அண்மைக் காலமாக இந்தியாவின்வடபகுதியில் அடர்ந்த காடுகளில் பெருமளவு புலிகள் கொல்லப்பட்டதுடன் அவற்றின்தோல்களும் எலும்புகளும் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். (கி)

அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிக் கோட்டத்திலுள்ள சகல அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அறிவித்துள்ளார். (கி)

இன்றைய கிரிக்கெட்

(கொழும்பு)

இலங்கை தெ. ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான 2வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி பகல்-இரவு ஆட்டமாக இன்று கேதாராமமைதானத்தில் நடைபெறவுள்ளது. 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 6ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (கி)

பலஸ்தீனியருக்கு சுயாட்சி இஸ்ரேல் வழங்கும்!

(லண்டன்)

பாலஸ்தீனியர்க்கு இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் சுயாட்சி வழங்குவதற்கான உடன்படிக்கையில் இஸ்ரேலும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் கையெழுத்திட்டுள்ளனவாம்.

இதன்படி இதுகாலவரை ஒருவரை ஒருவர் அங்கீகரிக்காத நிலை மாறி இஸ்ரேலும் பி. எல். ஓ இயக்கமும் ஒன்றை ஒன்று அங்கீகரிக்கும் நிலைக்கு வந்துள்ளன. இதன்படி இரு தரப்பினரும் அருகருகே அமைதியுடன் வாழ்வதற்கு உடன்பட்டுள்ளனர்.

இந்த உடன்படிக்கையின் முழுவிபரங்களும் வெளியிடப்படவில்லை. இருந்தபோதும் இந்த உடன்படிக்கையால் பாலஸ்தீனியர்க்கு எதிர்பார்த்தளவு சுயாட்சிக்கான அடித்தளம் கிட்டவில்லை. ஆனால் இஸ்ரேலினால் 1967ம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட 'காஸா', 'ஜெரிக்கோ' பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய படை வாபஸாகும்.

இந்த உடன்படிக்கை அமுலுக்கு வருமுன்னரே இஸ்ரேலில் தீவிர வாதயூதர்களும், பாலஸ்தீனிய கடும் போக்காளர்களும் ஏற்கனவே எதிர்ப்பில் இறங்கியுள்ளனர். (சே-கி)

ஆசிரியர், மாணவர் வங்குபற்றும் விளையாட்டு விழா

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள். ஆசிரியர்கள் மாணவர்கள் பங்குபற்றக்கூடிய விளையாட்டு விழா ஒன்றை இவ்வருடம் நடாத்துவதற்கு உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. அருணகிரிராசா தீர்மானித்துள்ளார். இவ்விளையாட்டு விழாவில் பங்குபற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை அவர் கோரியுள்ளார். (109-கி)

இந்திய தேசிய கொடி லண்டனில் எரிப்பு

(லண்டன்)

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லண்டனில் நடைபெற்ற சிநேகபூர்வ ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் போது அங்கு வைத்து இந்திய தேசியக் கொடியை எரித்த பாகிஸ்தானியர்களின் செயலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்திய அணி வெற்றிபெறும் நிலையில் அதனை குழப்பிய பாகிஸ்தானியர் மைதானத்துள் நுழைந்து குழப்பம் விளைவித்தனர்.

இதனால் போட்டி கைவிடப்பட்டது. குழப்பகாரரை கலைக்க லண்டன் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடாத்தியுள்ளனர். (கி)

கல்வி கற்க விளக்கு வசதி

(யாழ்ப்பாணம்)

கொய்யாத்தோட்டம் சன சமூக நிலையத்தில் மீண்டும் கடந்த 3 வார காலமாக இரவு வேளைகளில் மாலை 6-30 மணி தொடக்கம் 8-30 வரை இரண்டு பெற்றோமாக்ஸ் உதவியுடன் மேல்மாடியிலும் கீழ்மாடியிலும் ஆண்களும், பெண்களும் தனித்துவமாகக் கல்வி பயில வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. -கி

வட-கிழக்கில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் போன்று அடுத்த மூன்று மாத காலத்தினுள் இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல் ஒன்றை அவர்கள் மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். (கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 536/B